2019 ஜூலை 5] [திரு. எடப்பாடி கே. பழனிசாமி]

2. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் பயன்பாட்டில் உள்ள சொந்தக் கிடங்குகளின் கொள்ளளவினை அதிகரிக்கவும், எதிர்காலத்தில் உணவு தானியங்களை இருப்பு வைப்பதற்கான தேவையினைக் கருத்தில் கொண்டும், கூடுதலாக 36,000 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 28 கிடங்குகள் பல்வேறு இடங்களில் 59.40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–25

3. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் கல்நார் மேற்கூரைகளுடன் இயங்கிவரும் (AC Sheet roof) 55 கிடங்குகளில் மேற்கூரைகளை அகற்றிவிட்டு, நவீன மேற்கூரை அமைப்பான வண்ணம் தீட்டப்பட்ட ஸ்திரத்தன்மை அதிகம் கொண்ட துருப்பிடிக்காத மேற்கூரை அமைக்கும் பணி 21.65 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நடப்பு நிதியாண்டில் மேற்கொள்ளப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தில் இயங்கிவரும் கிடங்குகளின் வளாகத்தில் உள்ள பழுதடைந்த சாலைகளுக்குப் பதிலாக நீண்டநாள் பயன்படுத்தும் வகையிலும், மழைக் காலங்களில் சேதமடையாத வகையிலும், 54.44 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புதிய சிமெண்ட் கான்கிரீட் சாலைகள் நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம்மூலம் காய்கறிகள், புளி, பழங்கள், பருப்பு வகைகள், பூக்கள் மற்றும் இதர விவசாயப் பொருட்களைப் பாதுகாப்பான முறையில் சேமித்து வைத்திட 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவில் 3.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் சூரிய மின்சக்தியுடன் இயங்கக்கூடிய குளிர்சாதனக் கிடங்கு நடப்பு நிதியாண்டில் அமைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(ஆ) சென்னை மத்திய கூட்டுறவு வங்கி தலைமை அலுவலகம் மற்றும் கூட்டுறவுச் சங்கங்கள் நவீனமயமாக்குதல், அம்மா சிறு கூட்டுறவு அங்காடிகள் தொடங்குதல் உள்ளிட்ட கூட்டுறவுத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. எடப்பாடி கே. பழனிசாமி] [2019 ஜூலை 5

1. கூட்டுறவு நிறுவனங்களில் உட்கட்டமைப்பு வசதியினை மேம்படுத்தி வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளுடன் சிறந்த சேவையினை வழங்குவதற்காக 113 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 7 மத்தியக் கூட்டுறவு வங்கிக் கிளைகள், 2 பணியாளர் கூட்டுறவுக் கடன் மற்றும் சிக்கன நாணய சங்கங்கள், 2 நகரக் கூட்டுறவு வங்கிகள் மற்றும் ஒரு நகரக் கூட்டுறவுக் கடன் சங்கம் ஆக மொத்தம் 125 கூட்டுறவு நிறுவனங்களுக்கு 36.41 கோடி ரூபாய் செலவில் சொந்தக் கட்டடங்கள் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. கூட்டுறவு நிறுவனங்கள், வாடிக்கையாளர்களுக்கு நவீன வசதிகளுடன் புதுப்பொலிவுடன் சேவை அளிக்க ஏதுவாக, 118 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள், 16 மத்தியக் கூட்டுறவு வங்கிகள், 4 நகரக் கூட்டுறவு வங்கிகள், 3 நகரக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 2 தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கிகள் ஆக மொத்தம் 143 கூட்டுறவு நிறுவனங்கள் 24.91 கோடி ரூபாய் செலவில் நவீனமயமாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. சென்னை மத்திய கூட்டுறவு வங்கியின் தலைமை அலுவலகக் கட்டடம், மேம்படுத்தப்பட்ட உட்கட்டமைப்பு வசதிகளுடன் வாடிக்கையாளர்களுக்கு சிறப்பான சேவை வழங்கிடும்பொருட்டு, 8.88 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. தரமான நுகர்பொருட்களை நியாயமான விலையில் வழங்கிடவும், பண்டகசாலைகளின் இதர சேவைகளை பொதுமக்கள் மற்றும் நுகர்வோருக்கு அளித்திடவும், அரியலூர், புதுக்கோட்டை, தேனி, கன்னியாகுமரி மற்றும் கிருஷ்ணகிரி ஆகிய மண்டலங்களில் 5 மாவட்ட நுகர்வோர் கூட்டுறவு மொத்த விற்பனை பண்டகசாலைகள் புதிதாகத் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. ஒரு புதிய முயற்சியாகவும், நியாய விலைக் கடைகளின் குடும்ப அட்டைதாரர்கள் பயனடையும் வகையிலும், மாநிலம் முழுவதும் அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் 103 நியாய விலைக் கடைகளில் திறக்கப்பட்டன. இவ்வாறு திறக்கப்பட்ட கடைகள் சிறப்பாகச் செயல்பட்டு வருகின்றன.

மேலும், அம்மா சிறு கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் அனைத்திலும் மக்களின் அன்றாட தேவையான 300 வகையான பொருட்கள், அதிகபட்ச சில்லறை விலையிலிருந்து 5 சதவிகிதத்துக்கு குறைவான விலையில் விற்பனை செய்யப்படுவதால் மக்களின் வரவேற்பினைப் பெற்றுள்ளது. இத்தகைய சீரிய திட்டத்தினை மேலும் விரிவுபடுத்திட 582 அம்மா சிறு கூட்டுறவு சிறப்பங்காடிகள் 5.82 கோடி ரூபாய் செலவில் புதிதாகத் துவக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. விவசாயிகளின் தேவையைக் கருத்தில்கொண்டு தமிழ்நாட்டில் 19 மாவட்டங்களில் செயல்பட்டுவரும் 128 தொடக்க வேளாண்மைக் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் மற்றும் 10 வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் 100 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 122 கிடங்குகளும், 500 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 18 கிடங்குகளும், 1,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 7 கிடங்குகளும், 2,000 மெட்ரிக் டன் கொள்ளளவுடைய 2 கிடங்குகளும் ஆக மொத்தம் 32,200 மெட்ரிக் டன் கொள்ளளவு கொண்ட 149 கிடங்குகள் நடப்பாண்டில் 39.37 கோடி ரூபாய் செலவில் புதியதாகக் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

(இ) வன எல்லைகளை Differential Global Positioning System மூலம் வரையறை செய்தல், புலிகள் காப்பகங்களில் கலைநயமிக்க சிறு கூட்ட அரங்குகள் அமைத்தல், வேட்டைத் தடுப்புக் காவலர்களுக்கு தொகுப்பூதியத்தை உயர்த்துதல் உள்ளிட்ட வனத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

1. மத்திய அரசின் சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாறுபாடு அமைச்சகம் மற்றும் இந்திய வன அளவை நிறுவனம் தெரிவித்துள்ளவாறு வன நிலங்களைப் புவியளவை வரைபடத்தில் பதிவு செய்ய (Geo–referencing) வலியுறுத்தியுள்ளது. எனவே, வனத் துறையின்கீழ் வரும் வனப் பகுதி முழுவதையும் வன எல்லைகளைத் துல்லியமாக புவியிடங்காட்டி Differential Global Positioning System மூலமாக வரையறை செய்வதற்கான திட்டப் பணிகள் 50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, 3 ஆண்டுகளில்